உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் ஏப்ரல் 2023 | பூமி–02







## சைவத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இன்று சைவத்தமிழர்களின் அடையாளமாக விளங்கும் ஆதிச்சிவன் கோயில்கள் பல இடங்களிலும் அழிக்கப்பட்டு வருவது வேதனை தரும் விடயமாகும். குறிப்பாக வெடுக்குநாரி மலை, குருந்தூர் மலை, கீரிமலை ஆதிச்சிவன் கோயில் போன்ற ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இதைவிட ஏனைய சில ஆலயங்களும் பிற சமயத்தவரின் அடையாளத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கன்னியா வெந்நீரூற்று மிகப்பழமை வாய்ந்த சைவ மக்களின் வரலாற்று அடையாளமாகும். இதிகாச புராண காலத்தில் கூறப்பட்ட இலங்கை வேந்தன் இராவணனால் வெட்டப்பட்ட கன்னியா வெந்நீரூற்றை அநுராதபுர கால பௌத்த அடையாளச் சின்னம் என திரிபுபடுத்தியுள்ளனர். அங்கே செல்பவர்களுக்கு

தொடர்ச்சி 02ம் பக்கம்

வழங்கப்படும் நுழைவுச்சீட்டில் சைவத் தமிழ்ச் சின்னங்கள் புறக்கணிக்கப்பட்டு, தனித்த அநுராதபுர கால பௌத்த சின்ன அடையாளங்களோடு அச்சிடப்பட்டுள்ளது. இவ்வாறு தொல்லியல் திணைக்களம் பிரகடனப்படுத்தியுள்ளமை முழுச் சைவ உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறான சைவத்தை மறைக்கும் வேலைகளை இலங்கை அரசாங்கம் ஏன் செய்து கொண்டிருக்கிறது? இலங்கையில் ஆதிச் சமயமாக விளங்கும் சைவத்தை இல்லாமல் செய்வதற்கு எப்படி இவர்கள் முனைகிறார்கள்? இது பற்றி சைவ மக்கள் சிந்திக்க வேண்டும். குறிப்பாக ஈழத்தில் போர் ஏற்பட்ட பின்பு கிறிஸ்தவ மத அமைப்புக்கள் பல சைவ மக்களை மதம் மாற்றி வருவது அனைவரும் அறிந்த ஒன்று. கிழக்கிலங்கையில் சமீப காலத்தில் இஸ்லாமிய மத அமைப்பினர் பலர் சைவ மக்களை மதம் மாற்றுவதும், ஏழைகளுக்கு நிதியுதவி செய்து கட்டாய மதமாற்றம் செய்வதும் தொடர் கதையாகி உள்ளது. இத்தகைய துன்பத்திற்கு மத்தியில் சைவ மக்களின் புராதன சின்னங்களையும், அடையாளங்களையும் இல்லாமல் செய்வது மேலும் ஒரு பேரிடியாக உள்ளது.

**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

எனவே, சைவ மக்கள் விழித்தெழ வேண்டிய காலம் இது. எமக்காக குரல் கொடுக்க யாருமில்லை. சைவமக்களாகிய நாம்தான் ஒன்றுபட்டு எமக்காக குரல் கொடுக்க வேண்டும். சரியான திட்டமிடல்களோடு எங்கள் சமயத்தை காப்பாற்ற நாம் முன்வர வேண்டும். கிராமம் தோறும் உள்ள சைவசமய அமைப்புக்கள் இந்த எதிர்கால திட்டமிடல்களில் விழிப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால்தான் எதிர்காலத்தில் சைவசமயத்தை நிலைநாட்ட முடியும் என்கிற செய்தியை பகிர்ந்து கொள்கிறோம்.

**கலாநிதி. செஞ்சொற்செல்வர்.**
**ஆறு. திருமுருகன்**
**சிவபூமி பத்திரிகை ஆசிரியர்**

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் 1972ம் ஆண்டு அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பசுபதீஸ்வரர் திருக்கோவில் புதிதாக அமைக்கப்பட்டு பங்குனி 13ஆம் நாள் மார்ச் 27 (இலங்கை நேரப்படி) காலை 9.40 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது



தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் உற்சவம் 11.04.2023 செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்று மாலை அம்பாள் திருவீதியுலா வந்தார்.



# போதைப்பொருள் விழிப்புணர்வு ஓவியக்கண்காட்சி

அபயம், சிவபூமி அறக்கட்டளைகளுடன் இணைந்து துமி அமையம் யா/வட்டு இந்துக் கல்லூ ரியில் பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் போட்டியையும் கண்காட்சியையும் 03.04.2023 நடாத்தியிருந்தனர்.

யா/வட்டு இந்துக் கல்லூரி அதிபர் திருமதி. வதனி தில்லைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்து சிறப்பித்து மாணவர்களின் ஓவியங்களை பார்வையிட்டு இரசித்ததோடு, மாணவர்களை







ஆற்றுப்படுத்துகின்ற சிறப்புரை ஒன்றையும் வழங்கி, பாடசாலை நூலகத்திற்கு நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்பாகவும் வழங்கினார்கள்.

கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட வலிகாமம் வலய வழிகாட்டல் ஆலோசனைப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி. பி. சுதேஷ்குமார் அவர்களும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார்கள்.

வட்டு இந்துக் கல்லூரியின் சமூக நெறிக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நிகழ்வில் "விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்" எனும் கருப்பொருளில் மூன்று பிரிவுகளில் எழுபத்தைந்து ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் சித்திர பாட ஆசிரியர்களைக் கொண்ட நடுவர் குழாமால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஓவியங்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வுகள் யாவும் அபயம் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்புடன் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கையின் வடக்கு கிழக்கில் சைவக் கோயில்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் சம்பந்தமான அவசர கலந்துரையாடல் ஒன்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் 31.03.2023 அன்று நடைபெற்றது. பல்வேறு ஆலயங்களை சேர்ந்தவர்களும், சைவ அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், அடியவர்களும் கலந்துகொண்டார்கள்.




# சித்தத்தை சிறப்படையச் செய்யும் சித்திரை மாதம்

காலச்சக்கரம் மிக வேகமாக சுழன்று கொண்டிருக்கிறது. இந்த காலச் சக்கரத்தில் தமிழர்கள் ஓர் ஆண்டை கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் என ஆறு பருவங்களாக பிரித்தனர். மழை மேகங்களால் சூழ்ந்த ஆடி, ஆவணி மாதங்கள் கார் காலம் எனவும், குளிர் காற்று வீசும் புரட்டாதி, ஐப்பசி மாதங்கள் கூதிர்காலம் எனவும், விடியலில் பனி பெய்யும் கார்த்திகை, மார்கழி மாதங்கள் முன்பனிக்காலம் எனவும், காலையில் பனி பெய்யும் தை, மாசி மாதங்கள் பின்பனிக்காலம் எனவும், வசந்த காலமான பங்குனி, சித்திரை மாதங்கள் இளவேனிற்காலம் எனவும், கோடைகாலமான வைகாசி, ஆனி மாதங்கள் முதுவேனிற்காலம் எனவும் வகைப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் இளவேனிற் காலம் எனப்படும் வசந்த காலத்தின் முக்கிய மாதமாக சித்திரை இருக்கிறது. இந்த சித்திரை மாதத்தின் சிறப்புக்களின் தொகுப்பே இந்த கட்டுரை.

## தமிழ் புத்தாண்டு



இந்த மாதத்தில் தான் சூரியன், ராசிகளில் முதலாவதாக விளங்கும் மேடத்தின் பயணம் செய்வார். இதனால் சித்திரை மாதம் முதல் நாள் தமிழ் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் அதிகாலை நித்திய கடமைகளை முடித்து, கோவில்களுக்குச் சென்று அன்றைய ஆண்டில் எல்லா வளங்களும் பெற இறைவனை வழிபடுகின்றனர். மதிய வேளையில் உறவினர் மற்றும் நண்பர்களுடன் விருந்து உண்டு மகிழ்வார்கள். சிறியவர்கள் அனைவரும், பெரியவர்களிடம் ஆசியுடன் கைவிசேடமும் பெறுவார்கள்.

## பஞ்சாங்கம் படித்தல்

யோகம், திதி, கரணம், வாரம், நட்சத்திரம். இந்த ஐந்து அங்கங்களையும் கொண்ட பஞ்சாங்கம் சைவ மக்களின் வாழ்வியலில் முக்கியமானது. இதில் திதியை அறிவதால் திருமகள் அருள் கிட்டும். நட்சத்திரத்தை அறிவதால் வினைகள் அகலும். வாரம் ஆயுளை அதிகரிக்கும். யோகம் அறிவதால் நோயற்ற வாழ்வு உண்டாகும். அனுதினமும் கரணத்தைப் பற்றி அறிவதால், காரியம் சித்தியாகும். எனவே தினமும் பஞ்சாங்கம் படிப்பது அளவற்ற நன்மைகளைத் தரும். தினமும் படிக்க முடியாதவர்கள், சித்திரை முதல் நாளில் மட்டுமாவது, வீட்டுப் பூஜையறையில் தீபம் ஏற்றி, இறைவனை வழிபட்டுவிட்டு, அன்றைய தினத்துக்கான பஞ்சாங்கக் குறிப்பை படிக்கவேண்டும். வீட்டில் படிக்க வசதி இல்லாதவர்கள், கோயிலுக்குச் சென்று பஞ்சாங்கம் வாசிப்பதைக் கேட்கலாம். ஆலயங்களில் சித்திரை முதல் நாளில் பஞ்சாங்கம் படித்தல் நிகழ்வு நடைபெறும்.

## அட்சய திருதியை

சித்திரை மாதத்தின் வளர்பிறையின் மூன்றாவது நாளான திருதியை திதியை "அட்சய திருதியை" என்று அழைப்பார்கள். "அட்சய" என்பதற்கு "அள்ள அள்ள குறையாத" என்று பொருள்படும். இந்நாளில் செய்யப்படும் நல்ல செயல்களான, தான தருமங்கள் அள்ள அள்ள குறையாத அதிக பலன்களைத் தரும்.

அட்சய திருதியை அன்று தயிர்சாதம் தானம் செய்தால் ஆயுள் பெருகும். இனிப்புப் பொருட்கள் தானம் செய்தால் திருமணத்தடை அகலும். உணவு தானியங்கள் தானம் செய்தால் விபத்துகள் ஏற்படாது. கால்நடைகளுக்கு தீவனம் அளித்தால் வாழ்வு வளம் பெறும். எனவே தனியே பொன்னிற்கு உரியது மட்டுமல்ல அட்சய திருதியை. சகல பொருட்களுக்கும் ஆனது என்பதை நாம் உணர வேண்டும்.

## சித்திரை திருவிழா

ஆண்டுதோறும் சித்திரை மாத அமாவாசையை அடுத்த இரண்டாம் நாள் முதல் பன்னிரண்டு நாட்கள், மதுரையில் "சித்திரை திருவிழா" நடைபெறுகிறது. இவ்விழாவில் மீனாட்சி கல்யாணம் மற்றும் அழகர் ஆற்றில் இறங்குதல் என இரு முக்கிய நிகழ்வுகள் தென்னிந்தியாவில் நடைபெறுகின்றன. இவ்விழாவினைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் மதுரைக்கு



வருகை தருவார்கள். பத்தாம் நாள் திருவிழாவில் மீனாட்சி திருக்கல்யாணமும், 11-ம் நாள் தேரோட்டமும் நடைபெறும். சித்ரா பௌர்ணமி அன்று வைகை ஆற்றில், அழகர் எழுந்தருளும் வைபவம் நடக்கிறது.

## சித்திரா பௌர்ணமி

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி நாள் "சித்திரா பௌர்ணமி" என்ற பெயரில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினத்தில்தான், நம்முடைய பாவ - புண்ணிய கணக்குகளை நிர்ணயம் செய்பவரும், எமதர்மனின் உதவியாளருமான சித்திரகுப்தனுக்கு சிறப்பு வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் சிவபெருமான், அம்பிகை வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆறு, குளம், கடல் போன்ற நீர்நிலைகளின் கரைகளில் மக்கள்கூடி நிலவொளியில் அமர்ந்து "சித்ரான்னம்" என்று சொல்லக்கூடிய, பலவகையான கலவை சாத வகைகளை உண்டு மகிழ்ந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. சமகாலத்தில் ஆலயங்களில் சித்திராக் கஞ்சி எனும் வெப்பகாலத்திற்கேற்ற உணவு பிரசாதமாக வழங்கப்படுகிறது.



## இந்திர விழா.

இந்திர விழா தேவர்களின் தலைவனான இந்திரனைச் சிறப்பிக்க எடுக்கப்பட்ட விழாவாகும். சிலப்பதிகாரத்தில் பூம்புகாரில் இந்திர விழா, சித்திரா பௌர்ணமி அன்று நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள. வல்வெட்டித்துறையிலும் மிகச்சிறப்பாக ஆண்டுதோறும் இந்திரவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



## பைரவர் விரதம்

பொதுவாக பரணி நட்சத்திரம் வைரவ மூர்த்திக்குரியதாகும். அதிலும் சித்திரை மாதத்தில் வரும் பரணி நட்சத்திரம் மிக விசேடமானது. அன்று வைரவ விரதம் பின்பற்றப்படுகிறது. அன்றைக்கு திருமுறை ஓதுதல் வழக்கத்தில் உள்ளது.



இவ்வாறு பல விரதங்களையும் நிகழ்வுகளையும் கொண்ட சித்திரை மாதத்தில் இறை சிந்தனையோடு இணைந்திருப்போமாக

*ச.சந்தோஷன்*
*தமி மின்னிதழ் ஆசிரியர்*







**தெட்ஷணகைலாசம் என்னும் திருக்கோணமலையில் அருளாட்சி புரியும்**
**அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரமோற்ஸவம் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் (26.03.2023) ஆரம்பித்து**





எம் முன்னோர்களின் வாழ்வியல் மிகவும் அறிவுபூர்வமானது ஆரோக்கியமானது. அதிலும் நீர் மேலாண்மை/நீர் முகாமைத்துவம் தொடர்பான பிரதேசம் சார்ந்த அறிவியலை தங்கள் வாழ்வியலோடு இணைத்து வாழ்ந்த விதம் மிகவும் வியக்கத்தக்கதாகும்.

ஒவ்வொரு ஊரிலும் மழை பெய்தால் நீர் எந்தப் பகுதியை நோக்கி வருமோ அந்தப் பகுதியில் ஒரு குளம் அமைத்தார்கள். ஊரின் அனைத்து பாகங்களில் இருந்தும் எவ்வளவு நீர்வரத்து இருக்குமோ அவ்வளவையும் கொள்ளக்கூடிய விஸ்தீரணத்தோடும் ஆழத்தோடும் குளத்தை அமைத்தார்கள். எதிர்பாராத அதிக நீர் வரத்துக்கள் இருந்தால் அவை இன்னொரு குளத்தையோ/கடலையோ அடையும் ஒழுங்கமைப்புடன் அமைக்கப்பட்டது.

இக்குளங்கள்.நிலத்தடி நீர்த்தேக்கத்திற்கு (Aquifer) நீரை உட்செலுத்தும் (Recharging) ஒரு ஊடகமாகவே செயற்பட்டது.

குளத்தை சுற்றி மருதமரம், நெல்லி மரம், நாவல் மரம், வேப்ப மரம் போன்ற மரங்களை நட்டார்கள். குளத்தில் இருக்கின்ற நீர் ஆவியாவதை (Evaporation Lost) கணிசமான அளவு குறைப்பதற்கும் நீரினை சுத்திகரிப்பு (Treatment) செய்து நிலத்தடி நீர்த்தேக்கத்திற்கு அனுப்புவதற்கும் (இன்னும் பல) இவ்மரங்கள் பெரும் பங்கு வகித்தன.

குளத்தினை பாதுகாப்பதற்காகவும் குளத்தினை மாசுபடுத்தும் செயலை எவரும் செய்யாமல் தடுப்பதற்காகவும் அந்த மரத்தடியில் பிள்ளையாரையோ, முருகனையோ, அம்மனையோ, வைரவரையோ, ஒரு கடவுளை வைத்து வணங்கினார்கள்.குளத்தை மாசு படுத்தும் செயலை செய்தால் தெய்வம்



கண்ணை குத்தும் என்று நம்பினார்கள்/ நம்ப வைத்தார்கள். அதன் வழி குளத்தினை பாதுகாத்தனர்.




அக்கோயிலும் குளமும் அமைந்த இடத்தில் ஒரு கிணறு இருந்தது. அங்கேதான் அனைவரும் தங்களுக்குரிய நீரினை எடுப்பார்கள். அந்த நீர் சுவையாகவும் குளிர்மையாகவும் இருப்பதாக உணர்ந்தார்கள் (உண்மையில் மருத்துவ குணம் கொண்ட நீராகவே காணப்பட்டது).

பெரும்பாலும் அக்கோயிலின் திருவிழாக்கள் ஆனி மாதம் முதல் புரட்டாதி மாதத்திற்குள் நடைபெறும் (மழைக்காலத்திற்கு முன்). இறுதி நாள் திருவிழா தீர்த்தத் திருவிழா இதன் உண்மையான பொருள் தூர் வாருதல் திருவிழா (இன்று மறந்துவிட்டார்கள்.'.மாற்றி விட்டார்கள்).

அன்றைய நாள் அக்குளத்தில் தூர் எடுப்பார்கள் (Desilting). குளம் முழுமையாக தூர் வாரி துப்பரவு செய்யப்பட்டு பெய்கின்ற மழை நீரை முழுவதுமாய் கொள்வதற்கு தயாராகும். அத்துடன் இந்த தூ ரானது விவசாய நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தப்பட்டது. ஒரு நிலைபேறான நிலத்தடி நீரின் முகாமைத்துவம் வாழ்வியலோடு இப்படி அழகாக கலந்திருந்தது.

அர்த்தங்கள் புரியாமல் அம்மனுக்கு அர்த்த மண்டபம் கட்டிட பாதி குளத்தை மூடினோம். பிள்ளையாருக்கு மகா மண்டபம் கட்டிட மீதி குளத்தை மூடினோம். கோயில்களை மேம்படுத்துகின்றோம் என்கிற போர்வையில் குளங்களின் விஸ்தீரணங்கள் குறைக்கப்பட்டன/குளங்கள் முழுவதுமாய் மூடப்பட்டன

குளத்தை பாதுகாப்பதற்காய் வைத்த கடவுள்கள் குளத்தை சூறையாடியது போல இன்று கதை ஆகிவிட்டது. இருக்கின்ற குளங்களிலும் தூர்வாருதலில் மக்களின் பங்களிப்பும் பொறுப்பும் இல்லாமல் போனதோடு குப்பைகள் போடும் இடமாகவும் மாற்றி விட்டார்கள்.

வெள்ள அனர்த்தம், வறட்சி, நீர் மாசடைதல், நீர் தொடர்பான நோய்கள் அனைத்துக்கும் நன்றாகவே அத்திவாரமிட்டு அதன் உச்சபலனை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம்.



கோயில்களைவிட கோயில் குளங்களே முக்கியமானவை என்பதை நன்றாக உணர்ந்திருந்து அதன் வழி வாழ்ந்த எம் சமூகம் பிறழ்ப்பட்டு போனது நிலத்தடி நீர் தொடர்பான பிரச்னைக்கு முகம் கொடுக்க வழி வகுத்திருக்கிறது.

நிலத்தடி நீர் முகாமைத்துவத்தில் மூன்று கூறுகள் முக்கியத்துவம் பெறுகின்றன

1. நீரை உட்புகுத்தும் செயற்பாடு (Recharging)
2. நீரை வெளியே எடுக்கும் செயற்பாடு (Discharging)
3. நீரை மாசுபடுத்தாத செயற்பாடு (Pollution control )

நீரை உட்புகுத்துவதற்காகவே குளங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் மழை காலங்களில் வீடடை சுற்றி வரம்புகட்டியும் வெறும் காணிகளை உழுதுவிட்டும் வயல் வரம்புகளை கணிசமான அளவு உயரமாக கட்டியும் நீரை உட்புகுத்தும் செயலை திறம்பட மேற்கொண்டார்கள்.

அதேபோல் விவசாய நடவடிக்கைகளுக்காக நீரை எடுக்கும்போது அதிகாலையில் எடுத்தார்கள். சூரிய வெப்பத்தில் ஆவியாகுவதற்கு முன் பயிர்கள் நீரை பெறும் வழி செய்து நீரின் இழப்பை கணிசமாக குறைத்தார்கள். அத்துடன் பெரிய கிணறுகள் அமைத்து நீர் ஊறிவர விட்டே இறைத்தார்கள்.

நீர் மாசுபடும் வழிகள் தவிர்க்கப்பட்டன. இயற்கையான விவசாய முறைகளே முற்றுமுழுதுமாக பயன்படுத்தப்பட்டன. விவசாய நிலங்களில் வளர்கின்ற புல் பூண்டுகளை ஆடுமாடுகளுக்கு உணவாக வழங்கினார்கள்.அவற்றின் கழிவுகளை பயிர்களுக்கான உரமாக பயன்படுத்தினார்கள்.

எம் அழகான அறிவுபூர்வமான வாழ்வியல் இன்று இக்கட்டான கட்டத்திற்கு வந்துவிட்டது. எம் வாழ்வியலை நாம் மீட்டெடுத்தாலே எமது எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்பது மிக உண்மை.

இனியாவது அர்த்தங்கள் புரிந்து செயலாற்றுவோம். எமது நீர் வளத்தினை பாதுகாக்கவும் அதில் உச்ச பலனை அடையவும் அரசாங்கத்தையும் அரச திணைக்களத்தையும் நம்பி இருக்காமல் எம் முன்னோர்கள் கையாண்ட நல்வழிகளை நாமும் கடைபிடிப்போம். இதுவே நீடித்து நிற்க கூடிய நிலைபேறான வழிமுறை ஆகும்.

**எந்திரி. ச.சர்வராஜா**
**நீர்ப்பாசன பொறியியலாளர்,**
**வடமாகாணம்**


## நினைவஞ்சலி



முன்னாள் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி, பேராசிரியர், வைத்திய கலாநிதி பாலகுமார் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி 10.04.2023 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

## தமிழ்த்தாய் வாழ்த்து.

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்து.



“காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப் போதொளிர் பூந்தாமரையும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி நீதியொளிர் செங்கோலாய் திருக்குறளைத் தாங்கு தமிழ் நீடு வாழ்க!

நால்வர் இசை அமுதிருக்க நம்மாழ்வார் மொழியிருக்கச் சேக்கிழாரின் பால்வடி செந்தமிழ் இருக்கக் கம்பச்சித்திரம் இருக்கப் பகலே போன்று ஞாலத்தில் அறம் விளங்கும் நாயனார் குறளிருக்க நமது நற்றாய் காலத்தை வென்றோங்கும் கற்பகம் போல் கனி பெருகக் கண்டிலோமோ”.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தால் யோகர் சுவாமிகளின் 59வது குருபூசை நிகழ்வு செஞ்சொற்செல்வர். கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் பங்குனி மாத ஆயிலியம் நட்சத்திரத்தன்று (01.04.2023) நல்லூர் துர்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. துர்க்காபுர மகளீர் இல்ல மாணவிகளால் யோகர் சுவாமிகளது நற்சிந்தனை பாடல்கள் பாடப்பட்டதுடன் இளைப்பாறிய யா/வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் உயர்திரு.செ.பாலச்சந்திரன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றது.









இந்தியாவில் சென்னையில் எமது நல்லை நகர் நாவலர் பெருமானுக்கு சிலை மற்றும் அரங்கம் நிறுவிக் கௌரவம் அளித்துள்ளார்கள். முனைவர்.த.ராமசுப்பிரமணியம் அவர்களின் முயற்சியில் இத்திருப்பணி நிறைவேறியது.













**வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில்
பன்றித்தலைச்சியம்மன் ஆலய
பங்குனித் திங்கள் உற்சவ காலத்தில்
அடியவர்கள் பொங்கல் பொங்கி,
அம்மனை வழிபட்டார்கள்.**






**அவுஸ்திரேலியாவின் சிட்னி
முருகன் ஆலய சித்திரை தேர்
பவனி 04.04.2023 அன்று
சிறப்பாக நடைபெற்றது.**

இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது (சித்திரை 2023) ISBN - 978-955-7420-00-4